Australian Government

COVID-19 VACCINATION

# கர்ப்பநிலையும், தாய்ப்பாலூட்டலும், 'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகளும்

'கோவிட்-19' தடுப்பூசிகளை இட்டுக்கொள்ளுமாறு கர்ப்பிணிப் பெண்களுக்கு அறிவுரைக்கப்படுகிறது. கர்ப்பமாக இருக்கும், தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருக்கும் அல்லது கர்ப்பமாகும் திட்டத்தில் இருக்கும் பெண்களுக்கு 'ப்ஃபைசர்' தெரிவு செய்யப்படும் 'கோவிட்-19' தடுப்பூசியாகும். கர்ப்பமாக இருக்கும், மற்றும் தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருக்கும் பெண்களுக்கு 'ப்ஃபைசர்' பாதுகாப்பானது என்றும், இந்தத் தடுப்பூசி மருந்தினை அவர்கள் கர்ப்பகாலத்தின் எவ்வொரு கட்டத்திலும் இட்டுக்கொள்ளலாம் என்றும் ஆய்வு காண்பிக்கிறது.

கர்ப்பிணிப் பெண்களுக்கும் அவர்களுக்குப் பிறக்கவிருக்கும் குழந்தைக்கும் 'கோவிட்-19' காரணமாகப் பாரதூர விளைவுகள் ஏற்படுவதற்கான அபாயம் மற்றவர்களுக்கு இருப்பதை விட அதிகம். 'கோவிட்-19' நோய் ஏற்படும் கர்ப்பிணிப் பெண்களுக்கு மருத்துவமனைக்குச் செல்லவேண்டிய தேவை ஏற்படுவதற்கான, அல்லது தீவிரக் கவனிப்பிற்குத் தேவை ஏற்படுவதற்கான அபாயம் அதிகமாக இருக்கும். அவர்களுக்குப் பிறக்கவிருக்கும் குழந்தை குறைப்பிரசவமாய்ப் பிறப்பதற்கான வாய்ப்பும் (கர்ப்பகாலத்தின் 37 வாரங்களுக்கு முன்பாகப் பிறத்தல்), கவனிப்பிற்காக மருத்துவமனைக்குச் செல்லவேண்டிய தேவையும் சிறிது உயர்வாக இருக்கும்.

இந்த ஆபத்துகளைக் குறைத்துக்கொள்வதற்குத் தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வது மிகச் சிறந்த வழியாகும். மிகச் சிறந்த பாதுகாப்பினைப் பெறுவதற்காக. 'ப்ஃபைசர்' தடுப்பூசியின் இரண்டு மருந்தளவுகளை 3 முதல் 6 வார கால இடைவெளியில் பெற்றுக்கொள்ள கர்ப்பிணிப் பெண்களுக்கு சிபாரிசு செய்யப்படுகிறது.

கர்ப்பகாலத்தில் 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தின் பாதுகாப்பினைப் பற்றி வெளிநாடுகளிலிருந்து கிடைத்த சான்று உள்ளது. 'ப்ஃபைசர்' தடுப்பூசி மருந்து கர்ப்பிணிப் பெண்களால் பயன்படுத்தப்படுவதற்குப் பாதுகாப்பானது என்று அறிக்கைகள் காண்பிக்கின்றன.

‘கோவிட்-19’ தடுப்பூசியை இட்டுக்கொள்வதினால் கர்ப்பிணிப் பெண்களும், கர்ப்பநிலையில் இல்லாத பெண்களும் ஒரே மாதிரியான பாதுகாப்பினைப் பெறுகிறார்கள் என்று ஆய்வு காண்பிக்கிறது.

குறைப்பிரசவம், குழந்தை இறந்து பிறத்தல், கரு-வளர்-கால வயதிற்கு ஏற்ற வளர்ச்சி இல்லாமல் குழந்தை இருத்தல், பிறப்பிலிருந்து இருக்கும் குறைபாடுகள் போன்ற சிக்கல்களுக்கான வாய்ப்புகள் தடுப்பூசியேற்றத்திற்குப் பிறகு அதிகரிப்பதில்லை. தடுப்பூசியேற்றலுக்குப் பிறகான பக்க விளைவுகள் கர்ப்பிணிப் பெண்களிலும், கர்ப்பநிலையில் இல்லாத பெண்களிலும் மிகவும் ஒரே மாதிரியாக இருந்ததாக 35,000-இற்கும் அதிகமான கர்ப்பிணிப் பெண்களில் மேற்கொள்ளப்பட்ட ஐக்கிய அமெரிக்க நாட்டு ஆய்வு ஒன்று காண்பித்தது.

கர்ப்பிணிப் பெண்களிடமிருந்து பெறப்படும் தரவுகள் அதிகரிக்க அதிகரிக்க, எமது அறிவுரையை நாங்கள் தொடர்ந்து புதுப்பித்துவருவோம்.

## கர்ப்ப காலத்தில் ‘கோவிட்-19’ தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகு ஏற்படுவதற்கான சாத்தியமுள்ள பக்கவிளைவுகள் யாவை?

‘ப்ஃபைசர்’ தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகான பொதுவான பக்க விளைவுகளில் உள்ளடங்குவன:

- காய்ச்சல்
- கை வலி
- தலைவலை
- தசை வலி
- மூட்டு வலி
- குளிர்க்-காய்ச்சல்கள்

நீங்கள் தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகு இந்தப் பக்க விளைவுகளில் எதுவும் உங்களுக்கு ஏற்பட்டால், இந்தப் பக்க விளைவுகளைக் குறைத்துக்கொள்வதற்காக நீங்கள் ‘பாரசிடமோல்’-ஐ எடுத்துக்கொள்ளலாம். கர்ப்பகாலத்தின் அனைத்துக் கட்டங்களிலும் ‘பாரசிடமோல்’ பாதுகாப்பானது.

கர்ப்பிணிப் பெண்களுக்கு, அல்லது அவர்களுடைய குழந்தைகளுக்கான குறிப்பிட்ட பக்க விளைவுகள் எதனையும் உலகைச் சுற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் கண்டறியவில்லை. இருந்தாலும், இது வரை கண்டறியப்படாத மிக அரிதான பக்க விளைவுகள் இருப்பதற்கான சாத்தியம் உள்ளது.

## கர்ப்பகாலத்தில் ‘கோவிட்-19’ தடுப்பூசியை இட்டுக்கொள்வதினால் என்னுடைய குழந்தைக்குக் கிடைக்கும் பலன்கள் எதுவும் உள்ளனவா?

‘கோவிட்-19’ இருக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்குக் குழந்தை இறந்து பிறப்பதற்கான சாத்தியமும், குறைப்பிரசவத்திற்கான (குழந்தை பிறக்கவேண்டிய நேரத்திற்கு முன்பே பிறப்பதற்கான) சாத்தியமும் மற்றவர்களுக்கு இருப்பதை விட அதிகம். பிரசவத்தின் பொழுது அவர்களுடைய குழந்தை இன்னல்படும் சாத்தியமும், அல்லது புதிதாய்ப் பிறந்த குழந்தைகளுக்கான மருத்துவமனை தீவிர சிகிச்சைப் பிரிவில்

குழந்தைகளுக்கு சிகிச்சை தேவைப்படுவதற்கான சாத்தியமும் அதிகமாய் இருக்கும்.

இந்த அபாயங்களை குறைப்பதற்கு தடுப்பூசியை இட்டுக்கொள்வது மிகச் சிறந்த வழியாகும்.

'கோவிட்-19' தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகு கர்ப்பிணிப் பெண்களால், குறிப்பாக கர்ப்பகாலத்தின் ஆரம்பத்தில் தடுப்பூசியை இட்டுக்கொண்ட பெண்களிலும், குழந்தை பிறப்பதற்கு முன்பாக இரண்டு மருந்தளவுகளையும் இட்டுக்கொண்ட பெண்களிலும் உருவாக்கப்படும் நோயெதிர்ப்பிகளால் கருக்கொடியைக் கடந்துசெல்ல இயலும் என்று அறிவியல் ஆதாரம் குறிகாட்டுகிறது. வாழ்க்கையின் முதல் சில வாரங்களில் 'கோவிட்-19'-இற்கு எதிரான சிறிது பாதுகாப்பினை இந்த நோயெதிர்ப்பிகள் குழந்தைக்கு அளிக்கக்கூடும்.

## தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருக்கும் பெண்களுக்கான சிபாரிசுகள் என்ன?

தாய்ப்பால் ஊட்டிக்கொண்டிருக்கும் பெண்களுக்கு 'ப்ஃபைசர்' தடுப்பூசி மருந்து சிபாரிசு செய்யப்படுகிறது. உங்களுடைய தடுப்பூசியை இட்டுக்கொள்வதற்கு முன்பு, அல்லது தடுப்பூசியை இட்டுக்கொண்ட பிறகு நீங்கள் தாய்ப்பால் ஊட்டுவதைத் தொடரலாம்.

## கர்ப்பமடையும் திட்டத்தில் இருக்கும் பெண்களுக்கான சிபாரிசுகள் என்ன?

கர்ப்பமடையும் திட்டத்தில் இருக்கும் பெண்களுக்காகவும் 'ப்ஃபைசர்' தடுப்பூசி மருந்து சிபாரிசு செய்யப்படுகிறது. கர்ப்பம் அடைவதற்கு முன்பாகத் தடுப்பூசி இட்டுக்கொள்வதென்பது உங்களுடைய கர்ப்பகாலம் நெடுக 'கோவிட்-19'-இற்கு எதிரான பாதுகாப்பினைப் பெறும் சாத்தியம் உங்களுக்கு இருக்கிறது என்பதைக் குறிக்கும். தயவு செய்து பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ளுங்கள்:

- 'கோவிட்-19' தடுப்பூசியை இட்டுக்கொள்வதற்கு முன்பாகவோ அல்லது தடுப்பூசியை இட்டுக்கொண்டதற்குப் பின்பாகவோ கர்ப்பமடைவதை நீங்கள் தவிர்க்க வேண்டியதில்லை.
- தடுப்பூசி இட்டுக்கொள்வது கருவளத்தினை (கருவுறும் திறனை) பாதிக்காது.
- தடுப்பூசியை இட்டுக்கொள்வதற்கு முன்பாக 'கர்ப்பநிலைச் சோதனை' (pregnancy test) ஒன்றை நீங்கள் மேற்கொள்ளவேண்டிய தேவையில்லை.

## மேலதிகத் தகவல்களுக்கு

‘கோவிட்-19’ தடுப்பூசியை நீங்கள் எந்த இடத்தில் பெறலாம் என்பதைத் தெரிந்துகொள்ள https://covid-vaccine.healthdirect.gov.au/eligibility எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.

‘கோவிட்-19’ தடுப்பூசிகளைப் பற்றிய கேள்விகள் உங்களுக்கு இருந்தால், உங்களுடைய மருத்துவருடன் பேசுங்கள், health.gov.au/covid19-vaccines-languages எனும் வலைத்தலப் பக்கத்திற்குச் செல்லுங்கள், அல்லது 1800 020 080-இல் ‘தேசிய கொரோனாவைரஸ் உதவி இணைப்பினை அழையுங்கள்.
மொழிபெயர்த்துரைப்பு சேவைகளுக்கு 131 450-ஐ அழையுங்கள்.